மாலை முரசு
பக்கங்கள் 17+3
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | சித்திரை 05 வெள்ளிக்கிழமை 18.04.2025 | அதிர்வு 258

# தமிழ் மக்களை கைவிடமாட்டோம்

## அமைச்சர் பிமல் உறுதி



"எமது கட்சியை நம்பி வாக்களித்த தமிழ் மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம்."

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்





# பிள்ளையான் மிகப்பெரும் குற்றவாளி!

## கம்மன்பிலவும் தப்ப முடியாது என்று அநுர அரசு தக்க பதிலடி

"பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மிகப்பெரும் குற்றவாளி. அவரைத் தேசப்பற்றாளர் என்று உதய கம்மன்பில கூறுவது வெட்கக்கேடானது."

- இவ்வாறு அநுர அரசின் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட

02

# அநுர தரப்பே உண்மையான இனவாதிகள்!

## ஜனாதிபதியின் யாழ். உரையைக் கடுமையாகச் சாடிய கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையும் அவரது கட்சியான தேசிய மக்கள் சக்தியையும் கடுமையாகச் சாடியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இவர்கள் ஆட்சிக்கு வர முன்னர் வழங்கிய வாக்குறுதிகளில் தமிழ் மக்களுக்கு ஒன்றையேனும் நிறைவேற்றி உள்ளனரா எனக் கேள்வி எழுப்பியுள்ள கஜேந்திரகுமார் எம்.பி., மதவாதம், இனவாத ரீதியாகச் செயற்படுகின்ற இனவாதிகள் என்றும் அநுர தரப்பை அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம், கொக்குவிலில் உள்ள தமது கட்சியின் தலைமை

04



# அநுர அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி!

## எதிரணிகள் கொள்கையளவில் இணக்கம்

தசிய மக்கள் சக்திக்கான ஆதரவு வலையைக் கட்டுப்படுத்தவதற்குரிய அரசியல் போரை முன்னெடுத்து வரும் எதிர்க்கட்சிகள், உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளன.

இது தொடர்பில் தென்னிலங்கையில் உள்ள பிரதான கட்சிகள் ஆரம்பகட்ட பேச்சுகளை ஆரம்பித்துள்ளன எனவும், கூட்டணி அமைப்பதற்குக் கொள்கை அடிப்படையில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்து ஆட்சி அமைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலம் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்காது என எதிரணிகள் நம்புகின்றன. எனவேதான் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சித்து வருகின்றன.

# காதலன் குளத்தில் மூழ்கிப் பலி! கவலையில் காதலி உயிர்மாய்ப்பு!!

## தென்மராட்சியில் சோகம்





தாமரைப் பூ பறிக்கும்போது காதலன் குளத்தில் மூழ்கி உயிரிழந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு, கவலையில் காதலி தவறான முடிவெடுத்து உயர்மாய்துள்ளார்.

யாழ். தென்மராட்சி, வரணி பகுதியைச் சேர்ந்த 18 வயது யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வரணி பகுதியில் உள்ள குளமொன்றில் இருந்து நேற்று 23 வயது இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

குளத்தில் தாமரைப் பூ பறித்த போது அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அந்த இளைஞரின் மரண செய்தியை அறிந்த 18 வயதான காதலி இன்று அதிகாலை வீட்டில் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

சுட்டிபுரத்துக்கு அருகிலுள்ள குளமொன்றில் இளைஞரின் சடலம் மிதப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தமிழ் மக்களை...**

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல நாடெங்கிலும் வாழும் தமிழ் மக்கள், கடந்த இரண்டு பிரதான தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளார்கள். இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள், எமது கட்சிக்கு அமோக ஆதரவு வழங்கினார்கள். அதேபோல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் எமது கட்சிக்குப் பேராதரவு வழங்குவார்கள் என்று நம்புகின்றோம்.

எமது கட்சியை நம்பி வாக்களித்த தமிழ் மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். நாட்டில் இனவாதம், மதவாதம் இல்லாத ஒரேயொரு கட்சியே தேசிய மக்கள் சக்தி. அதனால்தான் தமிழ் மக்கள் எமது கட்சிக்கு அமோக ஆதரவு வழங்குகின்றார்கள். அவர்களின் எதிர்பார்ப்புக்களை நாம் நிறைவேற்றியே தீருவோம். இந்த நாட்டில் சிங்கள மக்களைப் போல் தமிழ், முஸ்லிம் மக்களும் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பம்." – என்றார்.

**பிள்ளையான்...**

சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 18 ஆண்டுகளின் பின்னர், கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சிவநேசத்துரை சந்திரகாந்தன்தற்போதுகுற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். பிள்ளையானின் சட்டத்தரணி என்ற ரீதியில் அவரை பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில நேரில் பார்வையிட்டுப் பேசியுள்ளார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில, "விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகி, நாட்டைப் பாதுகாப்பதற்காக இராணுவத்துடன் இணைந்து போராடியவர்தான் பிள்ளையான். அவர் தேசப்பற்றாளர் என்ற அடிப்படையிலேயே அவருக்காக முன்னிலையானேன்." – என்று கூறியிருந்தார்.

உதய கம்மன்பிலவின் கூற்றுக்கு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ பதில் வழங்கும்போது, "கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மிகப் பெரும் குற்றவாளி. அவரைத் தேசப்பற்றாளர் என்று உதய கம்மன்பில கூறுவது வெட்கக்கேடானது. பிள்ளையான் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் நீதிமன்றம் விசாரணை நடத்தி உரிய தண்டனையை வழங்கும். அதேபோல் உதய கம்மன்பிலவும் நல்லவர் அல்லர். அவரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டவர். நீதிமன்றங்களில் அவருக்கு எதிரான வழக்குகள் நிலுவையில் உள்ளன." – என்றார்.



# யாழில் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட காணிகள் இராணுவத்தினரின் பிடியிலேயே!

## உடனடியாக ஒப்படைக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு அருகாகவுள்ள "மாங்கொல்லை" காணிகளை, 2023ஆம் ஆண்டு மத்திய பகுதியில் விடுவிப்பதாக அறிவித்துள்ள போதிலும், அந்தக் காணிகள் இன்னமும் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்படாமல் இராணுவத்தின் பிடியில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை மேற்கு, ஜே/233 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 23 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட 47 பேருக்குச் சொந்தமான குறித்த காணிகள் 2023ஆம் ஆண்டு நடுப்பகுதியில் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டன. ஆனால், சிமெந்துத் தொழிற்சாலையில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவத்தினரின் தேவை கருதி அந்தக் காணிகளிலும் 13 ஏக்கர் நிலப் பகுதியே மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மிகுதி 10 ஏக்கர் நிலப்பரப்பும் சிமெந்துத் தொழிற்சாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வந்த இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது சிமெந்துத் தொழிற்சாலை முதலீட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அங்கு புதிய முதலீடுகளை உள்வாங்கி, அடுத்தகட்டத்தை நோக்கிக் கொண்டு செலும் முயற்சிகள் (நடைமுறைச் செயற்பாடுகள்) கடந்த ஏழு மாதங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப் படுகின்றன. எனினும், இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டு வந்த 10 ஏக்கர் காணிகள் தொடர்ந்தும் இராணுவத்தின் பிடியிலேயே உள்ளன.

அந்தக் காணிகளில் உள்ள இரண்டு வீடுகளில் தற்போதும் இராணுவத்தினர் (சிமெந்துத் தொழிற்சாலையின் பாதுகாப்புக்காக இருந்தவர்கள்) தேவையற்ற விதமாகத் தங்கியுள்ளனர். இதனால், கண்களுக்கு எட்டக்கூடிய இடத்தில் தமது வீடுகள் இருந்தும், அவை விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டும் அவற்றுக்குச் செல்ல முடியாத நிலையே காணப்படுகின்றது என்று பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், விடுவிக்கப்பட்ட 23 ஏக்கர் காணிகளில், பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட 13 ஏக்கர் பகுதிக்கும் உரிய பாதைகளும், இராணுவத்தால் தற்போது அடாத்தாகப் பிடித்துவைத்துள்ள பகுதியிலேயே அமைந்துள்ளன. இதனால், மேற்படி 13 ஏக்கர் பகுதியில் ஆதனங்களைக் கொண்ட மக்களும் தமது காணிகளுக்குள் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, இவ்வாறான போலி விடுவிப்புகளை மேற்கொள்ளாமல், தமது காணிகளை முற்றுமுழுதாகப் பயன்படுத்தும் வகையில் அவற்றைத் தம்மிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

# உளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்ற இளைஞரே இரத்தக்கறைக் காயங்களுடன் சடலமாக மீட்பு

## உறவினர்கள் வாக்குமூலம்

(கி.வசந்தன்)

வவுனியா, உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்ற இளைஞரே இரத்தக்கறைக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பாவற்குளத்தின் சூடு வெந்தபுலவு அலைகரைப் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இளைஞர் ஒருவரின் சடலம் இரத்தக்கறைக் காயங்களுடன் மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த புதுவருட தினமன்று காணாமல்போயிருந்த வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிதாசன் (வயது 33) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டிருந்தது.

மேற்படி இளைஞர் புதுவருட தினத்தன்று (திங்கட்கிழமை) காலை வீட்டில் இருந்து சென்றார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அதன் பின் காலையில் சூடுவெந்தபுலவு வீதியில் நின்றார் எனவும், தமது கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றபோது, மரணமடைந்த இளைஞர், "என்னைச் சிலர் தாக்குகின்றனர். இது தொடர்பில் உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் போகின்றேன். எனவே, பொலிஸ் நிலையத்தில என்னை இறக்கி விடுங்கள்:" – என்று கோரியுள்ளார் எனவும் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து மேற்படி இளைஞர் உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் இறக்கி விடப்பட்டார் எனவும், அவர் பொலிஸ் நிலையத்துக்குள் சென்றார் எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்பின் அவரைத் தேடியும்



கிடைக்காத நிலையில் இரண்டு தினங்களின் பின் கடந்த புதன்கிழமையே அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் உறவினர்கள் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.



# கல்லடியில் சிலுவைப் பயணம்!

(பழுவூரான்)

நாவற்குடா புனித சின்ன லூர்து அன்னை திருத்தலப் பங்குத்தந்தை அருட்பணி ஏ.யேசுதாசன் அடிகளாரின் வழிப்பாட்டில், நாவற்குடா பங்கு மக்களின் பங்குபற்றுதலுடன் யேசுகிறிஸ்துவின் சிலுவைப் பயணம் கல்லடி விநாயகர் வித்தியாலய முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை (18) ஆரம்பமாகி இடம்பெற்றது.

இந்தச் சிலுவைப் பயணம் பழைய கல்முனை வீதியூடாகப் பயணித்து சின்ன லூர்த்து அன்னை திருத்தலத்தை வந்தடைந்தது.

இதன்போது இயேசு கிறிஸ்து நாதருக்கு யூதர்களால் நிகழ்த்தப்பட்ட கொடுமைகள் உணர்வு பூர்வமாகப் பங்கு மக்களால் சித்தரித்துக் காட்டப்பட்டது.





## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**அநுர தரப்பே...**

அலுவலகத்தில் இன்று மாலை நடத்திய ஊடக சந்திப்பின்போது நேற்று யாழ். வந்த ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் கஜேந்திரகுமார் எம்.பி. கடுமையாக விமர்சித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் அதேபோல் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும் பல்வேறு வாக்குறுதிகளை அநுர தரப்பினர் வழங்கியிருந்தனர்.

அதிலும் தமிழ் மக்கள் விடயத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கும் தீர்வை ஏற்படுத்துவதாக அவர்கள் கூறியிருந்தனர்.

ஆனால், ஆட்சிக்கு வந்து ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களின் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வை அவர்கள் ஏற்படுத்தவில்லை. இதுமட்டுமல்லாது இவற்றுக்குத் தீர்வைக் காண்பதற்கு எந்தவித முயற்சிகளையும் அவர்கள் எடுக்கவில்லை.

இவ்வாறாக மக்களை ஏமாற்றித் தொடர்ந்தும் மேடைகளில் ஏறி தம்மைப் புனிதர்களாகக் காட்டி ஏமாற்று வித்தைகளையே அநுர தரப்பினர் செய்து வருகின்றனர்.

தையிட்டி விகாரை விவகாரத்திலும் அரசியல்வாதிகளின் தலையீடு இருப்பதாக ஜனாதிபதி அநுர கூறியிருக்கின்றார். தற்போதும் தாமே அதிகாரத்தில் இருக்கின்ற நிலைமையில் முதலில் அந்தப் பிரச்சினைக்கு அவர் உடனடியாகத் தீர்வைக் காண வேண்டும்.

அதைவிடுத்து தமிழ் மக்கள் விடயத்தில் எதனையும் செய்யாமல் மக்களை ஏமாற்றும் வகையில் மேடைகளில் ஏறி வேறு யார் மீதும் பழியைப் போட்டுவிட்டு தாம் தப்பிக்க முயலக் கூடாது. எனவே, தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு இதயசுத்தியுடன் உடனடியாகத் தீர்வை ஏற்படுத்தத் தயாரா என ஜனாதிபதியிடம் கேட்கின்றோம்.

மேலும் இனவாதத்துக்கு இடமில்லை என்றும், இனவாதத்துக்குத் தாம் இடமளிக்க மாட்டோம் என்றும் கூறுகின்ற ஜனாதிபதி, இனவாத, மதவாத ரீதியாகப் பரப்புரையைத் தாங்கள் செய்ததை மறக்கக்கூடாது.

தமிழ் மக்கள் விடயத்தில் எப்போதும் இனவாத, மதவாத ரீதியாகச் செயற்படுவது தேசிய மக்கள் சக்தி என்ற ஜே.வி.பி.தான். அந்தக் கட்சியைச் சார்ந்த ஜனாதிபதியின் செயற்பாடுகளும் அவரது பேச்சுக்களும் இனவாதம்தான். அவர்களே உண்மையில் இனவாதிகள்." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அநுரவின் பூச்சுற்றல்

யாழ்ப்பாணம் வந்து சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா முன்னைய சிங்களத் தலைவர்கள் போல தானும் - இம்முறையும் - தமிழ் மக்களின் காதில் நன்றாகவே பூச்சூற்றி விட்டுச் சென்றிருக்கின்றார்.

அவர் அளந்த கதைகள் பலப் பல. அதில் ஒன்று - காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துவதற்கு நாங்கள் இயலுமானவரை முயற்சிக்கின்றோம் என விட்ட கயிறுதான்.

அரசாங்கத்திடம் - பொலிஸாரிடம் - இராணுவத்தினரிடம் - கையளிக்கப்பட்ட உங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துவோம், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை நாங்கள் தேடிப் பார்க்க வேண்டும், அதுதான் பொறுப்புள்ள அரசாங்கத்தின் பணி என்று தத்துவம் பிளந்திருக்கின்றார் நாட்டின் அதிஉத்தமர்.

நித்திரை கொள்பவனை எழுப்பலாம். நித்திரை கொள்பவன் போல பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது.

காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் உண்மைகளைக் கண்டறிந்து, அம்பலப்படுத்துவதற்கு அதற்கான திடசங்கற்பமும் பற்றுறுதியுமுடைய அரசியல் தலைமை அவசியம்.

யுத்த காலத்தில் அரச படைகள் செய்த எல்லாக் குற்றங்களையும் மூடி மறைப்போம் என்ற பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மைச் சிந்தனையில் - திமிரில் - மூழ்கிக் கிடக்கும் அரசுத் தலைமையிடம் இருந்து, யுத்தத்தின் போது வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் விடயத்தில் உண்மையைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்டுவோம் என்ற பேச்சு வெளிப்படுவது என்பது வெறும் காதில் பூச்சூற்றும் அபத்த நாடகமன்றி வேறில்லை. இது விடயத்தில் வெறுங் கையால் முழம் போட்டு, ஏற்கனவே நலிந்து போயிருக்கும் தமிழ் சமுதாயத்தை நையாண்டி பண்ணுகின்றார் ஜனாதிபதி அநுர.

படைகளுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் எவற்றையும் விசாரிக்கத் தயாரில்லை என்ற சிங்களத்தின் நிலைமையில் மாற்றம் இல்லாத போது, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் நீதி கிட்டும் என்பதும் சாத்தியமற்றது.

காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் நீதியை நிலை நாட்டுவதும் பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்துவதும் இரண்டாவது விடயங்கள். முதலாவது விவகாரம் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிவதுதான்.

அந்த உண்மைகளைக் கண்டறிவதற்கு என்ன எதிர்ப்பு வந்தாலும் அதைத் தேடிப் பார்ப்போம், துப்பறிவோம், புலனாய்வு செய்வோம் என்ற பற்றுறுதி அரசுத் தலைமைக்கு இருக்க வேண்டும். ஆனால் பௌத்த - சிங்களப் பேரின வாக்குகளில் தங்கி இருக்கும் கட்சிகளினால் அத்தகைய உண்மையை கண்டறியும் நேர்மையான முயற்சிகளில் ஈடுபட முடியாது என்பது தெளிவானது. வெளிப்படையானது.

தங்களுடைய ஜே.வி.பி. கட்சியில் இருந்தே காணாமல் ஆக்கப்பட்ட லலித் குமார், குகன் போன்ற முன்னணிச் செயற்பாட்டாளர்களின் கதை குறித்துத் தேடிப் பார்க்க முடியாத ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா - நாட்டில் முப்படையினர் இழைத்த யுத்த குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள் குறித்து நீதி, நேர்மையான, சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணைகளை நடத்துவதற்கு இணங்கியே வராத அநுரகுமார திஸநாயக்க - வடக்கில் யுத்தத்தின் போது படையினரிடம் கையளிக்கப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவர்கள் உட்பட காணாமலாக்கப்பட்ட எல்லோர் குறித்தும் உண்மைகளைத் தேடிக் கண்டறிந்து வெளிப்படுத்துவோம் என்று பிரலாபிப்பது 'கூரையேறி கோழி பிடிக்க முடி யாதவன், வானமேறி வைகுண்டம் போன கதைக்கு' ஒப்பானதுதான்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## புத்தாண்டுக்கு பின் உள்ளூராட்சி தேர்தல் அம்பாறை மாவட்டத்தில் சூடுபிடிக்கிறது!

(வி.ரி. சகாதேவராஜா )

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் புத்தாண்டுக்கு பின்னர் நாளுக்கு நாள் சூடுபிடித்து வருகின்றன.

குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் தற்போதுதான் பிரசாரம் களைகட்டத் தொடங்கியுள்ளது.

வேட்பாளர்கள் வட்டார ரீதியாகத் தமது ஆதரவாளர்களுடன் வீடு வீடாகச் சென்று ஆதரவு கோரி வருகின்றனர். சில இடங்களில் வாக்குறுதிகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்படுகின்றன.

தமிழர் பிரதேசங்களில் இலங்கை தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, என்விபி போன்ற கட்சிகள் மற்றும் சுயேச்சை அணிகளிடையேயும் கடும் போட்டிகள் நிலவுகின்றன. குறிப்பாகத் திருக்கோவில் பிரதேசத்தில் வண்டில் சின்ன சுயேச்சை அணி பரவலாக பேசப்படும் அணியாக உருவெடுத்து வருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக 19 கட்சிகளின் 122 வேட்பு மனுக்கள் மற்றும் சுயாதீன குழுக்களால் 24 வேட்பு மனுக்கள் மொத்தமாக 146 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றில் 19 அரசியல் கட்சிகள் மற்றும் 3 சுயாதீன குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்த ரிஷாத்!

அம்பாறைக்கு விஜயம் மேற்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

அந்தவகையில், அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, சம்மாந்துறை பிரதேச சபை, இறக்காமம் பிரதேச சபை, அட்டாளைச்சேனை பிரதேச சபை, பொத்துவில் பிரதேச சபை, காரைதீவு பிரதேச சபை, நாவிதன்வெளி பிரதேச சபை மற்றும் நிந்தவூர் பிரதேச சபை ஆகிய இடங்களில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சிக் கிளை அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வுகள் மற்றும் மக்கள் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள்,



அம்பாறை மாவட்ட மத்திய குழு உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், அம்பாறை மாவட்டத்தில் உள்ள 09 உள்ளூராட்சி சபைகளில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, மயில் சின்னத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# மட்டக்களப்பில் பாஸ்கு நாட்டிய நிகழ்வு!

(பழுவூரான்)

புத்த சாசன மதம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மண்முனை வடக்கு கலாசார மத்திய நிலைய மாணவர்கள், உத்தியோகத்தர்கள் இணைந்து நடத்திய பாஸ்கு நாட்டிய நாடக நிகழ்வு புதன்கிழமை (17) மட்டக்களப்பு இருதயபுரம் திருஇருதய நாதர் அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திருமதி ஜே.ஜே. முரளிதரனும், கௌரவ அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் திருமதி கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடியும், சிறப்பதிகளாக மட்டக்களப்பு மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜீவரத்தினம் ஜார்ஜ் ஜீவராஜ் அடிகளாரும், மட்டக்களப்பு மறை மாவட்ட நிதிப் பொறுப்பாளர் அருட்தந்தை மரியான் தம்பி ஸ்டனிஸ்லாஸ் அடிகளாரும் திருஇருதயநாதர் பங்குத்தந்தை அருட்தந்தை கிளமெண்ட் வி. அன்னதாஸ் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் கலைஞர்கள் என சுமார் 80 பேர் கலந்து கொண்டனர்.

புனித வாரத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு சிறப்பாக அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










# வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக பைஷல்!

(அபு அலா, த.ஜெபி ஜனார்த்)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கள் அமைச்சின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள இஷட்.ஏ.எம்.பைஷல் தனது கடமைகளை நேற்று முன்தினம் (16) பொறுப்பேற்றுக் கொண்டார்.

தொடர்ச்சி▼



# வீதி அபிவிருத்தி...

**தொடர்ச்சி▲**

வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிவந்த எம்.எம்.நஸீர் கடந்த 11 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்தே, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமையாற்றி வருகின்ற இஷட்.ஏ.எம்.பைஷல் அந்தப் பதவிக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக கடமையாற்றும் பொருட்டு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ண சேகரவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.






# பிரான்சில் இடம்பெற்ற தமிழ்ச் சங்க 27 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்!

பிரான்சின் புறநகர் பகுதியில் ஒன்றான 77 ஆவது மாவட்டத்தில் அமைந்துள்ள செல் நகர பிராங்கோ தமிழ்ச் சங்கத்தின் 27 ஆம் ஆண்டு நிறைவு விழா தமிழ்ச் சோலை மாணவர்களால் நடத்தப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. மங்கல விளகை மாநகர முதல்வர் எம். பிறைஸ்ராபஸ்ரி, துணை முதல்வர் மற்றும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பரப்புரைப் பொறுப்பாளர் து. மேத்தா, தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் பொறுப்பாளர் பாலகுமாரன், தமிழச் சோலைத் தலைமைப் பணியகம் சார்பாக செயலாளர் காணிக்கைநாதன், தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சுரேஸ், தமிழ்ச் சோலை நிர்வாகி கு. நிமலகுமாரன் மற்றும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து அகவணக்கம் செய்யப்பட்டது. தமிழ்ச்சோலை மாணவர்களால் தமிழ்ச் சோலைக் கீதம் இசைக்கப்பட்டது. வரவேற்புரையும், வரவேற்பு நடனமும் இடம்பெற்றன.

தொடர்ந்து கோலாட்டம், ஊடகங்களால் ஏற்படும் நன்மை தீமைகள் பற்றிய கருத்தரங்கம் என்பன இடம்பெற்றன.

நிர்வாகியின் சிறப்புரையைத் தொடர்ந்து மாநகர முதல்வர் தனது உரையை ஆற்றியிருந்தார். அதில், தமிழ் மக்களின் தாய்மண் பற்று, மொழிப்பற்று என்பவற்றை தாங்கள் நன்கு அறிவார்கள். அதனை அழியவிடாது பாதுகாப்பதோடு அடுத்துவரும் தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதற்கு மாநகரத்தில் தாமும் உதவுவதையிட்டு பெருமையடைவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து விலங்ககம் என்னும் தலைப்பில் காட்சி நடனம், எழுச்சி நடனம், பண்டாரவன்னியன் நாடகம், ஈழவழநாடு கும்மி நடனம், ஆங்கிலப்பாடல், வில்லுப்பாட்டு, தாளலயம், கவியரங்கம், தமிழ்ப் புலவர்கள் பற்றிய நாடகம் என்பன இடம்பெற்றன.

நிகழ்வின் சிறப்பாக காத்தவராயன் கூத்து நிகழ்வானது அனைவரையும் ஈர்த்தது.

















# ஈழப்போராட்டத்தில் பங்கேற்ற முதல் பெண்ணாளுமை புஷ்பராணி மறைந்தார் !

● முருகபூபதி

தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்தின் தொடக்க காலத்தில் பங்கேற்ற சகோதரி புஷ்பராணி நேற்று (17) பாரிஸில் மறைந்துவிட்டார்.

தனது வாழ்வில் வசந்தத்தை காணாமல், வலிகளை மாத்திரமே அனுபவித்த புஷ்பராணி போன்ற பெண் ஆளுமைகளை எமது சமூகம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

1976 ஆம் ஆண்டு, மயிலிட்டியில் மறைந்த தந்தையார் சிதம்பரியின் இறுதி நிகழ்வுக்கு புஷ்பராணியும் இவரது சகோதரர் புஷ்பராசாவும் கொழும்பிலிருந்த சிறையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்ட செய்தி அன்று ஊடகங்களில் வெளியானபோது அது எமது சமூகத்தில் பரபரப்பாக பேசப்பட்டது.

உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெயரையும் பெருமையையும் பெற்ற ஸ்ரீமாவின் காலத்தில்தான் தென்னிலங்கையிலும் வட இலங்கையிலும் விடுதலை வேட்கை நிரம்பிய பெண்கள் சித்திரவதைக்குள்ளாகத் தொடங்கினர்.

1971 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் புனித பிரதேசம் என்று அழைக்கப்படும் கதிர்காமத்தில், அங்கு வாழ்ந்த அழகி மனம்பேரி பிரேமாவதி மானபங்கப் படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இந்த அவலத்தை எனது சொல்லத் தவறிய கதைகள் தொடரில் எழுதியிருக்கின்றேன். இந்தத் தொடர் மூத்த பத்திரிகையாளர் வித்தியாதரன் ஆசிரியராகவிருந்த காலைக்கதிரில் முன்னர் வெளியானது.

சொல்லத் தவறிய கதைகள் நூலின் அறிமுக நிகழ்வு பாரிஸில் 2019 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடந்தபோதுதான் முதல் முதலாக புஷ்பராணி அக்காவை சந்தித்தேன்.

தமிழ் ஈழக்கனவுடன் களமிறங்கி பல்வேறு சோதனைகளையும் வேதனைகளையும் துன்புறுத்தல்களையும் சித்திரவதைகளையும் சந்தித்தவர் புஷ்பராணி.

புஷ்பராணி எழுதியிருக்கும் அகாலம் நூலை படித்திருக்கிறீர்களா..?

உலக வரலாற்றில் சிறை சென்ற பலர் எழுதியிருக்கும் நூல்களின் வரிசையில், நேரு ( World history ) நெல்சன் மண்டேலா (long walk to freedom) தொடக்கம், இந்திய பொடா – மிசா சட்டங்களில் தடுத்து வைக்கப்பட்ட தமிழகத் தலைவர்களின் நூல்கள், புலிகளிகள் இயக்கத்தினால் தடுத்துவைக்கப்பட்ட கடற்படை கொமடோர் அஜித் போயாகொட எழுதிய நீண்ட காத்திருப்பு, புனர்வாழ்வு முகாமிலிருந்த தமிழினி சிவகாமியின் ஒரு கூர்வாளின் நிழலில் முதலானவற்றை படித்திருப்பவர்கள், புஷ்பராணியின் அகாலம் நூலையும் படிக்கவேண்டும்.

புஷ்பராணி, அகாலம் நூலை வாக்களிக்கப்பட்ட பூமி என்ற முதல் அத்தியாயத்தை இவ்வாறு தொடங்குகிறார்.

“மிகுந்த நம்பிக்கையுடனும் எண்ணிலடங்கா அர்ப்பணிப்புகளுடனும் தொடக்கப்பட்ட ஒரு நியாயமான போராட்டத்தை நாங்கள் தோற்றுவிட்டு நிற்கிறோம். தமிழீழத்தை நோக்கிய போராட்டப் பாதையில் நெடிய நாற்பது வருடங்கள் கழிந்துவிட்டன. என்னுடைய பொது வாழ்வுக்கும் வயது அதுதான். இருபது வயதில் ஈழப் போராட்டத்தில் இணைந்து கொண்ட எனக்கு இப்போது அறுபது வயது. இந்த நெடும் போராட்டத்தில் ஆயிரக் கணக்கான போராளிகளும் பல்லாயிரக் கணக்கான பொது மக்களும் தங்களது இன்னுயிர்களை இழந்திருக்கிறார்கள். சில லட்சம் மக்கள் அகதிகளாகப் புலப்பெயர்வின் துண்டுகளில் சிதறிப்போயிருக்கிறார்கள்.”

தென்னிலங்கையிலிருக்கும் சிறைச்சாலைகள், நான்காவது மாடி எனச் சொல்லப்படும் கொடிய விசாரணை முகாம், மற்றும் வட இலங்கையில் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசர் – ஒல்லாந்தர் காலத்து கோட்டைக்குள் அமைந்துள்ள முறைபௌ ர்ழரளந என்பனவற்றுக்கு இறைச்சிக்கடை என்றும் பெயர் சூட்டலாம்.

இவரது தாய், தந்தை, சகோதரர், சகோதரி என்று முழுக்குடும்பமும் இந்த உரிமைப் போராட்டத்தில் இணைந்து நின்றது. அவர்களின் தியாகத்தையும் புஷ்பராணி தனது வரலாற்றில் பதிவுசெய்துள்ளார்.

இந்த நூலில் இவர் சொல்லும் செய்திகளை நான் பணியாற்றிய வீரகேசரியிலேயே ஏற்கனவே வாசித்து தெரிந்து வைத்திருந்தேன்.

ஆனால், அச்செய்திகளின் ஆழ, அகலத்தை அகாலம் படித்தே முழுமையாகத் தெரிந்துகொள்ள முடிந்தது.

புஷ்பராணி எழுதியிருக்கும் வரலாற்றில் வரும் காவல் துறையைச்சேர்ந்த பாத்திரங்கள் மட்டுமல்ல அரசியல் தலைமைத்துவம் பெற்ற பலரும் இறுதியில் அகால மரணத்தையே தழுவினார்கள்.

அவர்களின் பெயர்ப்பட்டியலே நீளமானது. பொது எதிரியை முறியடிக்க களம் புகுந்தவர்கள், சகோதரப் படுகொலைகளையும் புரிந்து, இறுதியில் தங்கள்

தொடர்ச்சி▼

# ஈழப்போராட்டத்தில் பங்கேற்ற முதல் பெண்ணாளுமை புஷ்பராணி மறைந்தார் !

**தொடர்ச்சி▲**

வாழ்வையும் அவலமாகவே முடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் புஷ்பராணியின் அகாலம் கூறுகிறது.

தனது இருபது வயதிலேயே கேரள நக்ஸலைட் போராளி அஜிதா எழுதிய அவரது நினைவுக் குறிப்புகளை படித்திருப்பவர் புஷ்பராணி.

அந்த அஜிதா பெற்றோருடன் சிறையில் அடைக்கப்பட்டவர். புஷ்பராணி தனது சகோதர சகோரிகளுடன் சிறையிலடைக்கப்பட்டவர்.

இலங்கை வடபுலத்தில் கடற்கரை கிராமமான மயிலிட்டியில் வாழ்ந்த சிதம்பரி – சின்னம்மா தம்பதியரின் பதின்மூன்று பிள்ளைகளில் நான்காவது பிள்ளையாக பிறந்தவர் புஷ்பராணி. அங்கிருந்த ஆதிக்க சாதியினருக்கும், மேட்டுக்குடியினருக்கும் மத்தியில் தனித்துவமாக வாழத் தலைப்பட்டவர் புஷ்பராணி.

வளரிளம் பருவத்தில் மருதாணிச்செடிகளை பறித்து வந்து அம்மியில் அரைத்து நகங்களில் பூசிக்களித்து ஊரில் சிட்டாக பறந்து திரிந்த இவரை அரசியல் ஆட்கொண்டதால் சிறைப் பறவையாகி பல்வேறு இன்னல்களையும் சந்திக்க நேர்ந்தது.

கைதாகியதும் தடுத்துவைத்து சித்திரவதை செய்த பொலிஸார், கேவலமாகப் பேசியும் பெண்ணுடலை அவமதித்தும் கொக்கரித்தபோது மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தவர். அடுத்து கோணிப்பையில் சாரைப் பாம்புடன் உன்னையும் போட்டு கட்டிவைப்போம் என்று சொன்னபோது வந்த அடக்க முடியாத சிரிப்பை தனது நூலில் சித்திரித்துள்ளார் புஷ்பராணி.

நெருக்கடி மிக்கவேளையிலும் இவரிடமிருந்த ஓர்மம் எம்மை திகைக்கவைக்கிறது.

துப்பாக்கியிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது என்ற உண்மையை ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் கிரகித்துக் கொள்ள வேண்டும் என்று சொன்ன தோழர் மாவோ சேதுங்கின் நூல்களை தனது பதின்ம வயதில் படித்திருக்கும் புஷ்பராணி, தனது போராட்ட வாழ்வில் கற்றதையும் பெற்றதையும் உள்வாங்கி, அதன் பட்டறிவை இந்த நூலின் இறுதியில் இவ்வாறு பதிவுசெய்துள்ளார்.

“இங்கே நான் பல்வேறு தரப்புகளின் தவறுகளை மனம்வெந்து சுட்டிக்காட்டுவது அவர்களைப் பழிக்கும் நடவடிக்கையோ அல்லது அவர்களை அவதூறு செய்யும் முயற்சியோ அல்ல. தவறுகளைச் சுட்டிக்காட்டுவது வெறுமனே குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கும் வேலையுமல்ல. இந்தத் தவறுகளில் இருந்து நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தத் தவறுகளை நாங்கள் எங்களிடமிருந்து வேரோடு களைய வேண்டியிருக்கிறது. இனி ஒரு துப்பாக்கிக் குண்டு துப்பாக்கியின் குழலிருந்தல்ல, நமது எண்ணங்களில் இருந்து கூடப் புறப்படக்கூடாது. ஆயுதப் போராட்டத்துக்கான எண்ணக் கருவை எமது சமூகத்தில் விதைத்த முன்னோடிகளில் ஒருத்தி என்ற வகையில் நான் உங்கள் முன் வெட்கித்து நிற்கின்றேன். ஆயுதப் போராட்டத்தில் நல்ல போராட்டம், மோசமான போராட்டம் என்று எதுவுமே கிடையாது. ஆயுதம் மோசமானது மட்டுமே. அது எவர் கையிலிருந்தாலும் அழிவைத்தவிர வேறொன்றிற்கும் அது பயன்படாது.”

தமது வாழ்வில் வசந்தத்தை காணாமல், வலிகளை மாத்திரமே அனுபவித்த புஷ்பராணி போன்ற பெண் ஆளுமைகளை எமது சமூகம் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

இனி எம்மிடம் சகோதரி புஷ்பராணி அவர்களின் நினைவுகள் மாத்திரமே எஞ்சியிருக்கும். எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

# அரச கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய பழக்கடை உரிமையாளருக்கு வழக்கு!

**(பாறுக் ஷிஹான்)**

அரச கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய பழக்கடை உரிமையாளரைச் சரீரப் பிணையில் செல்ல கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பழக்கடைகளின் நிலைமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றுக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழு பிரதான வீதியில் உள்ள பழக்கடை ஒன்றைத் திடீர் பரிசோதனை மேற்கொள்வதற்காகச் சென்றிருந்தனர்.

இதன் போது அப்பழக் கடையின் உரிமையாளர் என தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட நபர், தனது கடையைப் பரிசோதனை செய்ய வேண்டாம் எனத் தடுத்ததுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டுள்ளார்.

அங்கு சென்ற சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்களைக் கடமையை செய்யவிடாது இடையூறும் ஏற்படுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சாய்ந்தமருது பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸாரின் உதவியுடன் கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். பின்னர் குறித்த பழக்கடை உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.




இதன் போது பழக்கடை உரிமையாளரை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் கல்முனை நீதிவான் நீதிமன்று விடுவித்தது. எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதிவரை வழக்கு மறுதவணை இடப்பட்டுள்ளது.

பழக்கடையை மீள்பரிசோதனை செய்து ஏதேனும் குறைபாடுகள் மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படும் பட்சத்தில் கல்முனை நீதிவான் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

# மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழலை மக்கள் ஏற்படுத்த வேண்டாம்!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)




உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக் கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி. அரசு முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழல் ஏற்படும். அவ்வாறான ஒரு சூழலை மக்கள் ஏற்படுத்தக் கூடாது.

மன்னாரில் நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன் ஊடாக தமது அலுவல்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் மன்னார் விஜயம் மற்றும் தேர்தல் பிரச்சாரங்கள் அமைந்துள்ளன.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) கட்சியின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டு இருக்கின்ற நிலையில் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுகின்றது. சில சபைகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தை நாடி தற்போது வெற்றி பெற்றுள்ளோம்.

இந்த நிலையில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல சபைகளைக் கைப்பற்றும் நிலை ஏற்படும். எனினும் நாங்கள் நிர்ணயம் செய்யும் சக்தியாக இந்தத் தேர்தலில் காணப்படுவோம். யாருடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்ற நிலை உள்ளது. குறிப்பாகத் தேசியத்தை நேசிக்கும் தமிழ் கட்சிகளுடன் நாங்கள் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் சூழலை உருவாக்குவோம்.

இனிவரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லாதுவிட்டால் எமது பிரதேசங்களில் பிளவுகளும் அழிவுகளும் ஏற்படும். தேசியத்தை இல்லாது செய்யும் நடவடிக்கையையும் ஏற்படுத்தும். எனவே உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது நாங்கள் நிர்ணயம் செய்கின்ற சக்தியாக தேசியத்தை நேசிக்கும் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கின்ற வாய்ப்புகளை உருவாக்குவோம்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றனர். ஆனால் பாதிக்கப்பட்ட வன்னி பிரதேசங்களுக்கும் உங்களின் விஜயம் இடம் பெற வேண்டும் என்று அண்மையில் நாடாளுமன்றத்தில் கோரிக்கையை முன் வைத்து உரை நிகழ்த்தினேன்.

ஆனால் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தேர்தல் காலங்களில் மாத்திரமே வன்னி பிரதேசங்களுக்கு வருகின்றனர். குறிப்பாக மன்னார் மாவட்டத்துக்கு வருகின்றனர். தேர்தலில் தமது கட்சி வெற்றி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் வருகிறார்கள்.

குறிப்பாக மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி பிரதான விடையமாக பார்க்கப்படுகின்றது. மன்னார் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் குறித்த செயல்பாடுகளை நிறுத்த கோரிக்கை விடப்பட்டது. ஆனால் தற்போது மன்னாருக்குப் பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் வருகை என்பது இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், குறித்த இரு திட்டங்களையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமாகவும் அமையும்.

உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக் கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி. அரசு முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தைக் காப்பாற்ற முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தும். மன்னாரில் நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன் ஊடாகத் தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் மன்னார் விஜயம் மற்றும் தேர்தல் பிரச்சாரங்கள் அமைந்துள்ளன.- என்றார்.

# இரத்ததான முகாமும் மற்றும் தொற்றாநோய் விழிப்புணர்வும்

(ஏ.எச்.ஹஸ்பர்)

தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் ஒரு முயற்சியாக, இரத்ததான முகாமும் தொற்றாநோய் விழிப்புணர்வும் அகில இலங்கை சுதேச மருத்துவ எதிர்கால சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மதியம்ஒரு மணிவரை திருகோணமலை கடற்படைத்தள வீதியின் பெரியகடை சந்தை கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள தளம் நிறுவக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தொற்றா நோய்களைத் தடுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல் குறித்து சமூகத்துக்குக் கற்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

"நம்பிக்கையின் ஒரு துளி, வாழ்வின் ஒரு பரிசு" என்ற கருப்பொருளுடன், இரத்த தானம் இடம்பெறவுள்ளது.

இரத்ததானம் அவசர சிகிச்சை, அறுவை சிகிச்சைகள் மற்றும் கடுமையான நோய்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தும்.

இதில் கலந்துகொள்ளுமாறு அனைத்து பொது மக்களும் அழைக்கப்படுகின்றனர்.

மேலும் தகவலுக்கு, அனைத்திலங்கை வருங்கால சுதேச மருத்துவ அதிகாரிகள் சேவை சங்கத்துடன் 0778162702 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி!

(நூருல் ஹுதா உமர்)

இன்றைய காலகட்டத்தில் தொற்று நோய் மூலம் நிகழும் மரணங்களை விட தொற்றா நோய்கள் மூலம் நிகழும் இழப்புக்களும் மரணங்களும் அதிகரித்து வருகின்றது. தொற்றா நோய்கள் மூலம் நிகழும் இழப்புகளும் பொருளாதார இழப்புகளில் இருந்தும் மீள முடியாமல் பல குடும்பங்கள் தவிக்கின்றது.

மக்களிடையே தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வும் மிக குறைவாகவே காணப்படுகிறது. தொற்றா நோய்களில் இருந்து மக்களை விழிப்புணர்வு ஊட்டும் முகமாக இன்று நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. சிவசுப்பிரமணியம் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் ஏற்பாட்டில் நிந்தவூர் 11 ஆம் பிரிவு மக்களுக்கு தொற்றா நோய் சம்பந்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் போது "ஆரோக்கியமான உணவு , ஆரோக்கியமான வாழ்க்கை" எனும் தொனிப் பொருளில் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் நிந்தவூர் 11 ஆம் பிரிவைச் சேர்ந்த மகளிர் சங்க உறுப்பினர்கள் இந்த நடைபவனியை ஜின்னா பள்ளிவாசல் வீதியில் ஆரம்பித்து நிந்தவூர் பிரதேச செயலகம் வரை சென்று பிரதேச செயலக ஊழியர்களும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தினர்.







# சிறுபான்மையினர் நலனை நீங்கள் பேணவும்: பங்களாதேஷின் கருத்துக்கு இந்தியா பதிலடி

வக்ஃப் சட்டம் காரணமாக மேற்கு வங்கத்தில் வன்முறை ஏற்பட்டதாக பங்களாதேஷ் தெரிவித்த கருத்துக்களை இந்தியா கடுமையாக நிராகரித்துள்ளது.

அவை பொய்யானவை என்றும், பங்களாதேஷில் சிறுபான்மையினர் துன்புறுத்தப்படுவதிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சி இது என்றும் இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை பங்களாதேஷ் தலைமை ஆலோசகர் மொஹமட் யூனுஸின் பத்திரிகையாளர் செயலாளர், கடந்த வாரம் மேற்குவங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் வெடித்த வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை முஸ்லிம் சமூகங்களைப் பாதுகாக்க இந்திய அதிகாரிகளை வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், வங்கதேசத்தின் கருத்துக்கள், வங்கதேசத்தில் சிறுபான்மையினர் தொடர்ந்து துன்புறுத்தப்படுவது குறித்த இந்தியாவின் கவலைகளுடன் இணையாகக் காட்டும் ஒரு மறைக்கப்பட்ட, கபடமற்ற முயற்சியாகும் என்றார்.

அரசியல் கொந்தளிப்பு தொடங்கியதிலிருந்து 2024 ஆம் ஆண்டில் மத சிறுபான்மையினருக்கு எதிரான 2,400 அட்டூழியங்கள் வங்கதேசத்தில் நடந்துள்ளதாகவும், 2025 ஆம் ஆண்டில் இதுவரை இந்த எண்ணிக்கை 72 ஆக இருப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் தெரிவித்ததால், இந்தக் கருத்து முக்கியத்துவம் பெற்றது.

இதனிடையே மேற்கு வங்கத்தில் வெடித்த புதிய வன்முறையால் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

# பதவியும், சலுகையும் கொடுத்தால் வாயைமூடிக்கொண்டு இருப்பதா?

## பவன் கல்யாணை விமர்சித்தார் ரோஜா

திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்குச் சொந்தமான கோசாலையில் 100 இற்கும் மேற்பட்ட பசுக்கள் இறந்துவிட்டன என முன்னாள் திருப்பதி தேவஸ்தான ஆங்காவல குழு தலைவர் பூமண கருணாகர ரெட்டி குற்றம் சாட்டி இருந்தார். அவரது குற்றச்சாட்டுக்கு திருப்பதி தேவஸ்தானம் மறுப்பு தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில் கோசாலையில் பசுக்கள் இறப்புக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சியினர் நேற்று தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து முன்னாள் அமைச்சர் ரோஜா கருத்துத் தெரிவிக்கையில், ஆந்திர மாநில துணை முதலமைச்சர் பவன் கல்யாண் திருப்பதியில் அநியாயங்கள், தவறான செயல்கள் நடக்கும் போது ஏன் வாய் திறக்கவில்லை எனவும், பவன் கல்யாண் திசை திருப்பும் அரசியலில் ஈடுபட்டு வருகிறார் எனவும் தவறு செய்தவர்கள் ஏன் தண்டிக்கப்படவில்லை எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், பதவியும், சலுகையும் கொடுத்தால் அவர் வாயை மூடிக் கொண்டு இருப்பாரா? எனக் கேள்வி



எழுப்பிய ரோஜா, கோசாலையில் பசுக்கள் ஏன் இறந்துவிடுகிறது என அவர் தெளிவுபடுத்த வேண்டும் எனவும், ஏழுமலையானுக்கு துரோகம் செய்தால் என்ன நடக்கும் என சந்திரபாபு நாயுடு மற்றும் பவன் கல்யாணுக்கு தெரியும் எனவும், அவர்கள் அதை அனுபவித்து இருக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ரோஜா தெரிவித்த கருத்துத்தானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# ஆப்கானிஸ்தானிலிருந்த ஆயுதங்கள் பல்வேறு ஆயுதக்குழுக்களுக்கு விற்பனை

ஆப்கானிஸ்தானில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த சுமார் 5 லட்சம் ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களுக்கும் பல்வேறு ஆயுதக்குழுக்களுக்குவிற்பனைசெய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

2021ஆம் ஆண்டு தலிபானியர்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய போது, அமெரிக்காவினால் முன்னைய ஆப்கானிஸ்தான் அரசாங்கத் துக்கு வழங்கப்பட்ட ஒரு மில்லியன் ஆயுதங்கள் தலிபானியர்களால் பொறுப்பேற்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை தற்போது அல்கைடா போன்ற அமைப்புகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பதாக முன்னாள் ஆப்கானிஸ்தான் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.




# இடைக்கால போர் நிறுத்தத்தை நிராகரித்தது ஹமாஸ் அமைப்பு

இஸ்ரேல் முன்மொழிந்த இடைக்கால போர் நிறுத்தத் திட்டத்தை ஹமாஸ் உத்தியோகப்பூர்வமாக நிராகரித்துள்ளது.

பாலஸ்தீனத்துடன் 45 நாள்களுக்கான போர் நிறுத்த திட்டத்தை முன்மொழிந்த இஸ்ரேல், 10 பணயக் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் இணங்கியது.

எனினும் இவ்வாறான பகுதியளவான போர்நிறுத்த ஒப்பந்தங்களை தாங்கள் அங்கீகரிக்கப் போவதில்லை என்றும், அவை பெஞ்சமின் நெத்தன்யாஹூவின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கானவை என்றும் ஹமாஸின் பிரதானப் பேச்சாளர் காலில் அல் ஹய்யா தெரிவித்துள்ளார்.

தாங்கள் நிறைவானதும், முழுமையானதுமான போர் நிறுத்த ஏற்பாட்டையே எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தலிபான் மீதான தடையை நீக்கியது ரஷ்யா நீதிமன்றம்

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் பயங்கரவாத அமைப்பாக பெயரிடப்பட்ட தலிபான் மீதான தடையை ரஷ்யாவின் உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை நீக்கியது.

அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் திரும்பப் பெற்றதைத் தொடர்ந்து 2021 ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தைக் கைப்பற்றிய தலிபான், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ரஷ்யாவில் ஒரு பயங்கரவாத அமைப்பாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

நாட்டின் மீது அதன் கட்டுப்பாடு இருந்தபோதிலும், மனித உரிமைகள், நிர்வாகம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான சர்வதேச உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறியதால், தலிபான் தலைமையிலான நிர்வாகம் எந்த நாடும் முறையாக அங்கீகரிக்கப்படவில்லை.

இந்த நிலையில், ரஷ்ய நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பு, 2003 ஆம் ஆண்டு மொஸ்கோவின் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கப்பட்ட தலிபான்களுக்கு ஒரு இராஜதந்திர வெற்றியாகும்.

முன்னாள் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் 10 ஆண்டுகாலப் போரை நடத்தியது, இது 1989 இல் மொஸ்கோ தனது படைகளைத் திரும்பப் பெற்றதுடன் முடிந்தது.

எனினும், ஆப்கானிஸ்தானை நிலைநிறுத்த உதவுவதற்காக தலிபான்களுடன் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை ரஷ்ய அதிகாரிகள் அண்மையில் வலியுறுத்தி வருகின்றனர்.

அண்மைய ஆண்டுகளில், மத்திய ஆசிய நாடுகளான கஜகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் ஆகியவை தலிபான்களை பயங்கரவாதக் குழுக்களின் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளன.

2021 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு திரும்பியபோது,1996 முதல் 2001 வரையிலான முதல் ஆட்சிக் காலத்தை விட மிகவும் மிதமான ஆட்சியை வழங்குவதாக தலிபான்கள் உறுதியளித்தனர்.

ஆனால், 2021 கையகப்படுத்தலுக்குப் பின்னர் பெண்கள் மீது கட்டுப்பாடுகளை அமல்படுத்தத் தொடங்கினர்.

பூங்காக்கள், குளியலறைகள் மற்றும் உடற்பயிற்சி கூடங்கள் உள்ளிட்ட பெரும்பாலான பொது இடங்களில் பெண்கள் தடைசெய்யப்பட்டுள்ளனர்.அதேநேரத்தில், பெண்கள் ஆறாம் வகுப்புக்கு மேல் கல்வி கற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை 18/04/2025

## டொரண்டோவில் வீட்டு விலை வீழ்ச்சி

2025 ஆம் ஆண்டில், டொரண்டோ மற்றும் பெரும்பாகப் பகுதிகளில் வீட்டு விலை வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டு விலைகள் 03



# கனடாவின் அடுத்த பிரதமர் யார்? இரு கட்சிகளிடையே கடும் போட்டி

மார்க் கார்னி கனடாவின் தற் போதைய பிரதமர் என்றாலும், அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல.

அவர் சார்ந்த லிபரல் கட்சியின் முந்தைய தலைவரான ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகி யதால் கார்னி பிரதமர் ஆனார்.

எனவே, முறைப்படி தேர்தலில் வெற்றி பெறுபவர்தான் அடுத்து கனடாவில் பிரதமர் ஆக முடியும். 02




# வட்டி வீதத்தை மாற்றாமலிருக்க கனடிய மத்திய வங்கி தீர்மானம்

கனடிய மத்திய வங்கி இம்முறை வட்டி வீதத்தை மாற்றாமல் வைத்திருக்க தீர்மானித்துள்ளது. மத்திய வங்கி தொடர்ச்சியாக ஏழு முறை வட்டிவீதங்களை குறைத்திருந்தது.

மத்திய வங்கியின் பிரதான வட்டி விகிதம் இன்றைய நிலவரப்படி 2.75 வீதமாக பராமரிக்கப்படுகிறது. கடந்த ஜூன் மாதத்துக்குப் பிறகு, 02




# கனடாப் பயணிகளை மாநிலத்திற்கு வருமாறு கலிபோர்னியா மாநில ஆளுநர் அழைப்பு

இந்த கோடை காலத்தில் கனடாப் பயணிகளை மாநிலத்திற்கு வருமாறு அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில ஆளுநர் கேவின் நியூசம் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆளுனர் கேவின் புதிய சர்வதேச சுற்றுலா பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளார்.

வர்த்தக உரையாடல்கள், சுங்கவரி சர்ச்சைகள் மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலை ஆகியவை காரணமாக, அமெரிக்கா நோக்கி பயணிப்பதைத் தவிர்க்கும் கனடாப் பயணிகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலிபோர்னியா கெலிவாஷிங்டனில் இருந்து 2000 மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. ஹாலிவுட் சின்னம், 'வாக் ஆஃப் ஃபேம்', கடற்கரைப் புல்வெளிகள், திராட்சைத்தோட்டங்கள் என பல ஆண்டுகளாகவே கனடாப் பயணிகளின் மிகவும் பிரபலமான சுற்றுலா தலமாக கலிபோர்னியா இருந்துள்ளது.

எனினும், இவ்வாண்டு அதன் நிலைமை மாறிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில், 70 சதவீத கனடாப் பயணிகள் இந்த வருடம் அமெரிக்காவிற்குச் செல்ல விரும்பவில்லை என தெரிவித்துள்ளனர்.

மேலும், மார்ச் மாதத்தில், அமெரிக்க எல்லை வழியாக காரில் பயணிக்கும் கனடாப் பயணிகள் எண்ணிக்கை 32 சதவீதம் குறைந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவை '51வது மாநிலம்' என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டதும், கனடா மீது விதித்த புதிய சுங்க வரிகள் விதிக்கப்பட்டமையும் கனடிய பயணிகள் வீழ்ச்சிக்கான காரணமாக கருதப்படுகின்றது.

## கனடாவின்...

இந்நிலையில், மார்க் கார்னி கனடாவின் அடுத்த பிரதமராவாரா என்னும் கேள்வி எழுந்துள்ளது.

அதற்குக் காரணம், பிரதமர் பதவிக்கு கடும் போட்டி நிலவுகிறது. கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் ஆளும் லிபரல் கட்சிக்கும் இடையே மக்கள் ஆதரவில் வெறும் இரண்டு புள்ளிகள் தான் வித்தியாசம் நிலவுகிறது.

DailyMail ஊடகம் சமீபத்தில் நடத்திய ஆய்வொன்றில், மார்க் கார்னிக்கு மக்களிடையே 39 சதவிகித ஆதரவும், கன்சர்வேட்டிவ் கட்சியின் Pierre Poilievreக்கு 37 சதவிகித ஆதரவும் இருப்பது தெரியவந்துள்ளது.

கனடாவில் இம்மாதம், அதாவது, ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தேர்தல் நடப்பதற்கு இன்னும் இரண்டு வாரங்கள்தான் உள்ளன.

அந்த காலகட்டத்தில் மக்கள் எப்படி வேண்டுமானாலும் மாறலாம். ஆக, தேர்தலில் வெற்றி பெற்று கனடாவின் அடுத்த பிரதமராக ஆக இருப்பது மார்க் கார்னியா அல்லது Pierre Poilievre ஆ என்பதை மக்கள்தான் முடிவு செய்ய இருக்கிறார்கள்.

## வட்டி வீதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டிவீதம் குறைக்காமல் பேணப்படும் முதல் முறை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் இறக்குமதி சுங்க வரி சூழ்நிலை பொருளாதாரத் தில் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்தும் என்பதை சற்று கூடுதல் காலம் கவனிக்கவே வட்டி விகிதத்தில் திருத்தம் செய்யாதிருக்க முடிவு செய் தோம் என மத்திய வங்கி ஆளுநர் டிஃப் மேக்லெம் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கி தற்போது பொருளாதார வளர்ச்சியைப் பற்றி இரண்டு சாத்தியமான நிலைப்பாடுகளையும் முன்வைத்துள்ளது.

முதல் நிலைமையில், சுங்கவரி பிரச்சினை விரைவில் தீர்வு காணப்பட்டு, பொருளாதாரம் சிறிய பாதிப்புடன் மீண்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது நிலைமையில், நீண்டகால உலக வர்த்தகப் போர் உருவாகி, ஒரு ஆண்டிற்கும் மேல் கனடா பொருளாதாரம் மந்தநிலைக்குள் சிக்கிக்கொள்வதற்கான ஆபத்து இருப்பதாக தெரிவித்துள்ளது.

பொருளாதாரத்தின் நிதானமான முன்னேற்றத்தையும், பணவீக்கத்தையும் கட்டுப்படுத்துவதில் மத்திய வங்கி முழுமையாக உறுதிபூண்டுள்ளது என மேக்லெம் குறிப்பிட்டுள்ளார்.



# கனடா சென்ற மூதாட்டிக்கு 96,311 டொலர் மருத்துவ செலவு

இந்தியாவிலிருந்து தனது அன்பு மகனைப் பார்ப்பதற்காக கனடா சென்ற 88 வயது மூதாட்டிக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அலைஸ் ஜான் என்ற 88 வயது மூதாட்டி, கனடாவில் வசிக்கும் தனது மகன் ஜோசப் கிறிஸ்டியை பார்ப்பதற்காக ஆறு மாத கால சூப்பர் விசா மூலம் கடந்த ஜனவரி 2024 இல் கனடாவின் பிராம்ப்டன் நகருக்குச் சென்றுள்ளார்.

சூப்பர் விசா என்பது கனடாவில் நிரந்தரமாக வசிப்பவர்களின் பெற்றோர் மற்றும் தாத்தா, பாட்டி போன்றவர்களை குறிப்பிட்ட காலத்திற்கு கனடாவில் தங்குவதற்கு உதவும் ஒரு சிறப்பு விசா திட்டமாகும்.

கனடா சென்ற சில மணி நேரங்களிலேயே அலைஸ் ஜானுக்கு திடீரென மூச்சு விடுவதில் கடுமையான சிரமம் ஏற்பட்டதுடன் பின்னர் அவருக்கு காய்ச்சல், தொடர் இருமல் அறிகுறிகளும் தென்பட்ட நிலையில் அவர் ஹாமில்டன் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு சுமார் மூன்று வாரங்கள் வென்டிலேட்டர் உதவியுடன் அவருக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த குடும்பம், கனடாவில் மருத்துவச் செலவுகளை சமாளிக்க Manulife என்ற முன்னணி இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் அடிப்படை சூப்பர் விசா பயணக் காப்பீட்டு பாலிசி ஒன்றை எடுத்திருந்துள்ளது.

இந்த பாலிசி மூலம் அதிகபட்சமாக 100,000 டொலர் வரை மருத்துவச் செலவுகளைக் கோர முடியும்.

ஆனால், எதிர்பாராத விதமாக அலைஸ் ஜானின் மருத்துவச் சிகிச்சைக்கான காப்பீட்டு கோரலை இன்சூரன்ஸ் நிறுவனம் நிராகரித்துள்ளது.

இதற்கான காரணமாக அலைஸ் ஜானுக்கு ஏற்கனவே இருந்த உடல் நலப் பிரச்சனை காரணமாக பாலிசியின் விதிமுறைகளின்படி காப்பீடு வழங்க இயலாது என்று தெரிவித்துள்ளது.

காப்பீட்டு கிளைம் நிராகரிக்கப்பட்ட நிலையில், மருத்துவமனையில் அலைஸ் ஜானுக்கு ஏற்பட்ட 96,311 டொலர் (இந்திய மதிப்பில் சுமார் 57 லட்சம் ரூபாய்) என்ற மலைப்பான மருத்துவச் செலவை அவர்களே ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இருப்பினும், இந்த விவகாரத்தின் தீவிரத்தை உணர்ந்த Manulife நிறுவனம், ஆரம்பத்தில் கிளைம் நிராகரிக்கப்பட்ட போதிலும், இந்த வழக்கை மனிதாபிமான அடிப்படையில் மீண்டும் முழுமையாக பரிசீலிக்க முன்வந்தது.

மேலும் இன்சூரன்ஸ் நிறுவனம் தற்போது, அவர்கள் அந்த மருத்துவக் காப்பீட்டுத் தொகையை முழுமையாக வழங்க முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து Manulife நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், “சில சமயங்களில் மருத்துவப் பதிவுகளுக்கும், காப்பீட்டு ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கும் இடையே தெளிவற்ற முரண்பாடுகள் ஏற்படலாம். இதுபோன்ற தனித்துவமான மற்றும் உணர்வுப்பூர்வமான சூழ்நிலைகளில் நாங்கள் மறு ஆய்வு செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான முடிவுகளை எடுப்போம் என தெரிவித்துள்ளார்.

## டொரண்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்வடையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போதைய அரசியல் மற்றும் வர்த்தக சூழ்நிலை காரணமாக எதிர்வுகூறல்கள் திருத்தப்படுவதாக வீட்டுமனை தொடர்பான நிறுவனமான ராயல் லிபேஜ் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு முதல் காலாண்டில், டொரண்டோ பெரும்பாக பகுதியில் வீடுகளின் சராசரி விலை வருடாந்த அடிப்படையில் 2.7வீதம் குறைந்து 1,146,100 டொலர்களாக பதிவாகியுள்ளது.

மாவட்டத்துக்குள் டொரண்டோ நகரம் தனித்துவமாகப் பார்க்கும்போது, வீடுகளின் சராசரி விலை வருடத்துக்கு வருடம் 3.1 வீதம் குறைந்து 1,124,600 டொலர்களாக காணப்படுகின்றது.

அதேபோல், தனி வீடுகளின் நடுத்தர விலை 1,693,200 டொலர்களாகவும், குடியிருப்பு அபார்ட்மென்ட் வகை வீடுகளின் விலை 686,700 டொலர்களாகவும் குறைந்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




அமெரிக்காவுடன் நடக்கும் வர்த்தக மோதல், மதிப்பிழக்கும் கனடா டொலர், சர்வதேச பங்குச் சந்தைகளின் ஏற்றத் தாழ்வுகள் உள்ளிட்ட காரணிகளினால் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், டொரண்டோவாசிகளில் 45 சதவீதம் தற்போதைய கனடா பொருளாதார நிலைமையில் நம்பிக்கையில்லாமல் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.